உ

சிவமயம்

# சைவ சித்தாந்த மன்றம், கனடா

# Saiva Sidhdhantha Manram, Canada


தோற்றம்(Established): 1-12-1995

1008-50 Elm Drive East, Mississauga, ON, Canada. L5A 3X2

Email: saivamanram@gmail.com Fax/Tel: (905) 566-4822


**கூத்த பிரான் வணக்கம்**

ஆர்த்தெழுந்து உலகோடு உயிர் ஆடிட
நீத்தத் தண்மதி நீள்சடை ஆடிட
ஏத்தும் திண்ணபுரத்து நின்று ஆடிடும்
கூத்தன் சேவடி கும்பிடு வாமரோ.

– ஈழத்துச் சிதம்பர புராணம்

## வேண்டுதல்

காரைநகர் மக்கள் மட்டுமன்றி, ஈழத்து சைவமக்கள் போற்றி வழிபட்டு வருவது ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகரிலுள்ள திண்ணபுரத்து சிவன் ஆலயமாகும். அவ்வாலயத்தின் நித்திய பூசைகள் முட்டின்றி நடைபெற காலத்திற்குக் காலம் பலரும் முயற்சிகள் எடுத்து வந்தனர். கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஈழத்துச் சிதம்பர திருத்தொண்டர் சங்கம் என்பது தோற்றம் பெற்றதன் மூல காரணம் சிவன் ஆலயத்தின் நாட் (நித்திய) பூசைகள் முட்டின்றி நடைபெற ஆவன செய்வதற்காகவே ஆகும். அதற்கான தேவைகளை சிறிது காலம் சங்கம் நிறைவாகக் கவனித்து வரக்கூடியதாக இருந்தது. பின்னர் ஆலயத்தின் கோபுரத் திருப்பணிகள் நடைபெற வேண்டிய தேவைகளால் திருப்பணிச்சபையினர் நிதி வேண்டிச் சங்கத்தின் ஆதரவை வேண்டினர். இவ்வாறு பல தேவைகளை கவனிக்கச் சங்கம் முற்பட வேண்டியதாயிற்று.

இப்போது காரைக் கலாச்சார மன்றம் எடுக்கும் நன்முயற்சி வெற்றிபெற வேண்டுமென திண்ணபுரக் கூத்தப்பெருமான் திருவருள் நிறைவாகக் கிடைக்க வேண்டுகிறேன். மக்கள் தங்களின் உறவுகளின் நினைவாகவோ, தங்களினது அல்லது பிள்ளைகளின் பிறந்த தினங்களுக்காகவோ அல்லது குடும்பத்துக்காகவோ வேறு காரணங்களுக்காகவோ அரும் சமயப்பணியாகிய நித்திய பூசை அறப்பணியில் ஒவ்வொருவரும் உவந்து பங்கு பற்றுமாறு பணிவன்புடன் வேண்டுதல் செய்கிறேன்.

சிவாலயப் பூசைகள் முட்டின்றி நடைபெற வேண்டுமென்பதையும் அவ்வாறு நடைபெறா விட்டால் ஏற்படும் அனர்த்தங்களையும் **திருமூலர் தம் திருமந்திம் இரண்டாம் தந்திரத்தில்** 19. **திருக்கோயிற் குற்றம் என்ற பதிகத்தில் பாடல்கள்** 3, 4 **இல்** பின்வருமாறு கூறுகிறார்.

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே. 3 (ம. ப. பா.)----->

முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுந்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே. 4

இத் திருப்பணியில் உலகெங்கும் புலம் பெயர்ந்து பரந்து வாழும் காரைநகர் மக்களையும் இணைப்பது பொருத்தமானதாகும். நித்தியபூசை நிதியத்தை ஒரு நம்பிக்கை நிதியமாக வைப்பு வைத்து காலத்திற்குக் காலம் அதன் நிதித்தொகையை அதிகரித்து வந்தால், காலப்போக்கில் அந்த நம்பிக்கை நிதியத்தில் கிடைக்கும் வட்டி மூலம் ஒரு நிரந்தர வருமானம் நித்திய பூசைக்கு கிடைக்கவும், தடையின்றி நித்திய பூசை நடைபெறவும் முடியும் என்பது என் நம்பிக்கை.

இன்றைய கூட்டத்தில் பங்கு பற்ற முடியாமையை எண்ணி வருந்துகிறேன். உங்கள் அனைவரினதும் நன்முயற்சி வெற்றிபெற ஈழத்துச் சிதம்பர சிவகாமி உடனுறை நடராசப் பெருமானை வணங்குகிறேன்.

''திண்ணபுரத் தெம்பெருமான் திருவடிக ளேத்துஞ்
சிவதொண்டர் திருக்கூட்டத் தடியார்க்கு மடியேன்''

– ஈழத்துச் சிதம்பர புராணம்

தி. விசுவலிங்கம்